# பொதுக்காலம் 12 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 49:1-6,

பதிலுரைப்பாடல்: திபா. 139: 1-3, 13-14, 15,

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம். 13: 22-26,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 57-66, 80

## திருப்பலி முன்னுரை:

அன்புக்குரியவர்களே,

புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். நமது ஆண்டவர் இயேசுவின் மீட்பு பணிக்காக உலக மக்களைத் தயாரித்த இறுதி இறைவாக்கினராக திருமுழுக்கு யோவான் இருந்தார். கிறிஸ்துவின் முன்னோடியாக இந்த உலகில் பிறந்த அவர், உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறியை மக்களுக்கு சுட்டிக்காட்டினார். கபிரியேல் வானதூதரால் முன்னறிவிக்கப்பட்ட அவரது பிறப்பின் நிகழ்வைத் திருச்சபை இன்று சிறப்பிக்கின்றது. யோவானைப் பின்பற்றி, கிறிஸ்துவை உலகிற்கு சுட்டிக்காட்டுபவர்களாக வாழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. தேர்ந்தெடுத்து வழிநடத்தும் இறைவா,**

உமது பணியை உலகெங்கும் நிறைவேற்ற, நீர் தேர்ந்தெடுத்துள்ள எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், நிறை உண்மையின் சாட்சிகளாகவும், கிறிஸ்துவை சுட்டிக்காட்டுபவர்களாகவும் திகழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. திருச்சபையை ஒளிர்விக்கும் இறைவா,**

உலகெங்கும் வாழும் திருச்சபையின் மக்கள் அனைவரும், உம்மை அறியாத மக்கள் முன்னிலையில் உமக்கு சான்றுபகரவும், உமது வழியில் நடந்து உலகிற்கு ஒளியாக திகழவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. முதியோர்களுக்காக :**

அன்பின் இறைவா! உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெறுகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல் ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

**4. மீட்பளிக்கும் நாயகராம் இறைவா,**

உலகில் தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும் இழந்து அகதிகளாக வாழும் மக்களுக்கும், பெற்றோராலும், பிள்ளைகளாலும் கைவிடப்பட்டு அனாதைகளாக வாழ்வோருக்கும் துன்பங்களிலிருந்து மீட்பளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. மகிமையின் மன்னராம் இறைவா,**

எங்கள் பங்கு குடும்பத்தில் வாழும் எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், புனித திருமுழுக்கு யோவானைப் போன்று உமது முன்னிலையில் தாழ்ச்சி உள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு உம்மை சுட்டிக் காட்டுபவர்களாகவும் வாழத் தேவையான வரங்களைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.